கொடுக்க நான் தயாராக இருக்கிறேன். அப்படியிருக்குமானால் அதை அனுமதிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். குறிப்பாக எங்களது திருவாரூர் மாவட்டப் பகுதிகள் முற்றிலும் விவசாயத்தைச் சார்ந்திருக்கிற பகுதிகள் என்ற காரணத்தினாலே, ஒரு வேளாண் கல்லூரியை அமைப்பதற்கான முயற்சியை, ஏற்பாட்டை அரசு செய்யுமா? அதிலும் குறிப்பாக மன்னார்குடி பகுதியிலே தொடங்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன். இது என்னுடைய தொடர்ந்த கேள்வியாக இருக்கிற காரணத்தினாலே, அதற்குரிய முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், தொழில் முனைவோர்களுக்கும், உற்பத்தியாளர்களுக்கும், உணவு பதப்படுத்துவோர்களுக்கும் இது சம்பந்தமான ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும் ஒரு பாலமாக அமைந்து, ஒருங்கிணைந்த முழுமையான வளர்ச்சிக்கு இப்போது துணைபுரிந்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கேள்வி எழுப்பியதைப்போல, வேளாண் பொருள்களைக் கொண்டு ஒரு தொழிற்சாலை அமைப்பதற்கு இதுவரை யாரும் விண்ணப்பிக்கவில்லை. அப்படி இதுவரை விண்ணப்பிக்கா விட்டாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் மூலமாக அப்படிப்பட்ட ஒரு கோரிக்கை வருமானால் அதை அரசு பரிசீலிக்கும். இப்போது தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் தொழில் வளர்ச்சிக் கழகம் அரசாங்கத்தினுடைய கொள்கைப்படி 11 சதவிகிதம், அவர்களுக்குப் பங்குத் தொகையாகக்கூட தரத் தயாராக இருக்கிறது. அப்படி யாராவது முன்வந்தால் அரசு அதற்கு எந்தவிதமான தயக்கமும் காட்டாமல் அந்த நிதியுதவியையும் வழங்கத் தயாராக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 25, திரு. குழந்தை தமிழரசன், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

25—

சாலை அமைத்தல்

***26280—திரு. குழந்தை தமிழரசன்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2000 நவம்பர் 9]

(அ) கடலூர் மாவட்டம், கம்மாபுரம் ஒன்றியம், இருப்பு ஊராட்சியிலிருந்து செடுத்தான்குப்பம் செல்லும் சாலையிலுள்ள 800 மீட்டர் நீளமுள்ள வனத் துறைக்குச் சொந்தமான இடத்தில் சாலை அமைத்துக்கொள்ள வனத் துறை அனுமதி வழங்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சாலை அமைப்பதற்கான விண்ணப்பம் அரசுக்கு அனுப்பப்படுமானால் அரசு அதனுடைய சாதக-பாதகங்கள் குறித்து முடிவெடுக்கும்.

திரு. குழந்தை தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சாதகமான சூழ்நிலையை அனுசரித்து அதற்கு ஆவன செய்வதாகத் தெரிவித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த செடுத்தான்குப்பம் கிராமம் என்பது இருப்பு கிராமத்தினுடைய Hamlet village ஆகும். இந்தச் சாலை வழியாக N.L.C. என்கிற நிலக்கரி நிறுவனத்திற்கு தினந்தோறும் நிரந்தர ஊழியர்களும், நிரந்தரம் அல்லாத ஊழியர்களும் பலபேர் பணிக்குச் சென்று வருகிறார்கள். இதுவரை இந்த 800 மீட்டர் சாலை அமைக்க முடியாமல் இருந்த காரணத்தினால் அங்கே Mini Bus விடுவதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கிறது. அதேபோன்று அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளையும் விடுவதற்கு வாய்ப்பு இல்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்கள் மக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றித் தருவதற்கு உடனடியாக ஆவன செய்ய அன்புடன் வேண்டி, செய்து தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த சாலையைப் போடுவதற்கு அனுமதி கொடுத்திருக்கலாம் சர்க்கார். ஆனால் கொடுக்கவில்லை. அந்த 9 கிலோ மீட்டரிலே 8 கிலோ மீட்டரை பஞ்சாயத்துதான் maintain செய்து கொண்டிருக்கிறது. ஒரு கிலோ மீட்டரைத்தான் Forest வைத்துக்கொண்டிருக்கிறது. அது விளாங்காடு வரையில்தான். மீதியை பஞ்சாயத்துதான் போட்டுக்கொண்டிருக்கிறது. கப்பி ரோடாக இருக்கிறது. அங்கே ஒரு சாலை போட வேண்டுமென்று விண்ணப்பம் வந்தால்தானே நாம் கொடுக்க முடியும். முதலிலேயே சாலை போடுவதற்கு

அனுமதி வழங்கலாமா என்று நாங்கள் கேட்டு, அதற்குப் பின்பா நாங்கள் கொடுக்க முடியும்? எனவே மாண்புமிகு உறுப்பினருக்கு தொகுதியின்பால் இருக்கிற அந்த அக்கறையை நான் பாராட்டுகிறேன். விரைவில் ஒரு விண்ணப்பதை அனுப்புங்கள்.

முற்பகல் 9-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 26, திரு. கே. ரவி அருணன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

26—

மருத்துவக் கூடம்

***35743—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 500 தொழிலாளர்களுக்குமேல் பணியாற்றும் எந்தெந்தத் தொழிற்சாலைகளில் அவசரகால மருத்துவக் கூடம் அமைத்து பராமரிக்கப்படாமல் உள்ளது?

(ஆ) எவ்வளவு காலத்திற்குள் அங்கு அவசரகால மருத்துவக் கூடம் அமைக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழகத்தில் 500 தொழிலாளர்களுக்குமேல் பணியாற்றும் கீழ்க்கண்ட 16 தொழிற்சாலைகளில் மட்டும் அவசரகால மருத்துவக் கூடம் அமைத்து பராமரிக்கப்படாமல் உள்ளது. அவையாவன:—

(1) எஸ்.வி. சுகர் மில்ஸ், காஞ்சிபுரம்.

(2) ஈரோடு மாவட்ட கோவாபரேடிவ் ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட், தாராபுரம்.

(3) ஸ்ரீவில்லிப்புத்தூர் கோவாபரேடிவ் ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட், 'ஏ' யூனிட், ஸ்ரீவில்லிப்புத்தூர்.